ஒமைக்ரான் தொற்று: 59 பேருக்கு மருத்துவப் பரிசோதனை

சென்னை, டிச. 16: சென்னையில் ஒமைக்ரான் தொற்று கண்டறியப் பட்டவரின் தந்தையின் இறுதிச் சடங்கில் பங்கேற்ற 59 பேருக்கு கரோனா பரிசோதனை செய்யப் பட்டது.

நைஜீரியாவிலிருந்து தோஹா வழியாக, 47 வயது மதிக்கத் தக்க நபர் கடந்த 10-ஆம் தேதி சென்னை வந்தார். அதிக பாதிப்பு இல்லாத நாட்டில் இருந்து வந்த தால், அவருக்குப் பரிசோதனை செய்யப்படவில்லை. தொடர்ந்து, சடங்குகளில் பங்கேற்ற அவருக்கு காய்ச்சல் ஏற்படவே, கரோனா பரிசோதனை செய்து கொண் டார். இதில், அவருக்கு கரோனா தொற்று கடந்த 14-ஆம் தேதி உறுதி செய்யப்பட்டது. உடன டியாக அவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த குடும்பத்தின ரையும், மக்கள் நல்வாழ்வுத் துறை, சென்னை மாநகராட்சி அதிகா ரிகள் தனிமைப்படுத்தி, பரிசோ தனை செய்தனர்.

அதில், 7 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது. இதனால், உருமாறிய ஒமைக்ரான் வைரஸ் பாதிப்பா என்பதை உறுதி செய்ய, சென்னை மரபணு பகுப்பாய்வு ஆய்வகத்தில் செய்யப்பட்ட பரி சோதனையில், ஒமைக்ரான் கண் டறியப்பட்டது. ஆனாலும், தேசிய வைராலஜி நிறுவனம், பரி சோதனை முடிவை உறுதி செய்ய, மாதிரிகள் பெங்களூருக்கு அனுப் பப்பட்டன.

அதில், நைஜீரியாவிலிருந்து வந் தவருக்குஒமைக்ரான்வைரஸ்புதன் கிழமை உறுதி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து, சென்னை சாலிகிராமத்தில் நடந்த இறுதிச் சடங்கில் பங்கேற்றவர்கள், ஒமைக் ரான் வைரஸ் உறுதி செய்யப்பட்ட நபருடன் தொடர்பில் இருந்தவர் கள் என 59 பேரை சென்னை மாந கராட்சி அடையாளம் கண்டுள் ளது. அவர்கள் அனைவரும் தனி மைப்படுத்தப்பட்டுள்ளதுடன், கரோனா பரிசோதனையும் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து, சென்னை மாநக ராட்சி அதிகாரிகள் கூறியதாவது:

ஒமைக்ரான் தொற்றால் பாதிக் கப்பட்டவரின் தந்தை இறுதிச் சடங்கில் பங்கேற்றவர்கள் அடை யாளம் காணப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். அவர் களுக்கும், ஆர்.டி.பி.சி.ஆர்., பரிசோதனை செய்யப்பட்டுள் ளது. தொற்று கண்டறியப்பட் டால் மருத்துவமனையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்படுவர். தொற்று இல்லை என்றால் ஒரு வாரத்துக்கு தனிமைப்படுத்தப் படுவர். டெல்டா வகை வைரஸ் பாதிப்புக்கு அளிக்கப்பட்ட சிகிச் சைதான், ஒமைக்ரான் வைரஸ் பாதிப்புக்கும் அளிக்கப்படுகிறது.

ஒமைக்ரான் தொற்றைப் பொருத்தவரை பெரிய அளவில் உடல்நிலை பாதிப்பை ஏற்படுத் தாது என்றாலும், தடுப்பூசிசெலுத் திக் கொண்டோர் முதல் அனைவ ருக்கும் வேகமாகப் பரவும் தன்மை உடையதாக உலக சுகாதார நிறு வனம் எச்சரித்துள்ளது. எனவே, பொதுமக்கள், முகக்கவசம், தடுப் பூசியை கட்டாயம் செலுத்திக் கொள்ள வேண்டும் என்றனர்.

விருது...

சென்னையில், வியாழக்கிழமை நீதிபதி மூ.புகழேந்தியின் 'பாரதிதாசன் வீரப்பெருங்காவியம்' நூல் அறிமுகம் மற்றும் நீதிபதி ச.மோகன் தமிழ் விருது வழங்கும் விழாவில் (இடமிருந்து) அப்பல்லோ மருத்துவமனை டாக்டர் வெ.இராஜராஜன், கவிஞர்கள் சிந்தை வாசன், உமர் கத்தாபு (கவிதை), அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கத் தலைவர் நல்லாமூர் கோ.பெரியண்ணன் (கல்வி), பதிப்பாளர் மோ.பாட்டழகன் (பதிப்பு), நூலாசிரியர் நீதிபதி மூ.புகழேந்தி, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி வி.சிவஞானம், உலக நட்புறவு மையம் தலைவர் ஜி.மணிலால், ஏர்வாடி எஸ்.ராதாகிருஷ்ணன் (இதழ்), எம்.ஜி.ஆர் ஜானகி மகளிர் கலை அறிவியல் கல்லூரி தமிழ்த் துறை தலைவர் அபிதா சபாபதி, எழுத்தாளர் மார்சல் முருகன் (உரைநடை), பேராசிரியர் மருதூர் அரங்கராசன் (ஆய்வு).

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும்

ஓ.பன்னீர்செல்வம்

சென்னை, டிச.16: விலைவாசி உயர் வைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுக்க வேண்டும் என்று அதிமுக ஒருங்கிணைப்பா ளர் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத் தினார்.

இது தொடர்பாக வியாழக் கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

பெட்ரோல் - டீசல் விலை உயர்வு, மளிகைப் பொருள் கள் விலை உயர்வு, கட்டுமானப் பொருள்கள் விலை உயர்வு, காய் கறிகள் விலை உயர்வு, கனிகள் விலை உயர்வு என்ற வரிசையில் தற்போது மீன்களின் விலையும், கட்டுமானப் பொருள்களின் விலையும் வரலாறு காணாத அள வுக்கு உயர்ந்துள்ளன.

அதிமுக ஆட்சியில் இருந்த விலைவாசியையும், தற்போ துள்ள விலைவாசியையும் ஒப் பிட்டுப் பார்த்தால், அனைத்துப் பொருள்களின் விலையும் இரு மடங்கு, மூன்று மடங்கு உயர்ந் துள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

மக்களின் வாங்கும் திறனுக்கு ஏற்ப பொருள்களை உற்பத்தி செய்வது, இயற்கைச் சீற்றங்களிலி ருந்து இன்றியமையாப் பொருள் களைக் காப்பது, பொருள்களை பதுக்கி வைத்து பற்றாக்குறை ஏற் படுத்துவோரைக் கண்டுபிடித்து தண்டிப்பது, கடத்தலைக் கட்டுப் படுத்துவது ஆகியவை விலைவா சியைக் கட்டுக்குள் கொண்டு வரு வதற்கான நடவடிக்கைகளாகும். இதைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் மாநில அரசுக்கு உண்டு. அதைச் செய்ய திமுக அரசு மறுத்து வருகிறது.

தாங்க முடியாத விலைவாசி உயர்வைக் கண்டு மக்கள் கண் ணீர் வடித்துக் கொண்டிருக்கின்ற இந்தத் தருணத்தில், விரக்தியில் உள்ள மக்களை மீட்டெடுக்கும் முயற்சியில் தமிழக முதல்வர் கவ னம் செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளார் அவர்.

மழை நீர் வடிகால் அமைப்பதற்கான பணிக் காலத்தை நீட்டிக்கக்கோரிய மனுவைப் பரிசீலிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னை, டிச.16: கரோனா கட்டுப்பாடுகள் காரணமாகப் பணியை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டதற்கான அபராதங் களை நீக்குவதோடு, மழை நீர் வடிகால் அமைப்பதற்கான பணி காலத்தை நீட்டிக்கக் கோரிய ஒப்பந்ததாரர்களின் மனுவை பரிசீலிக்குமாறு மாநகராட்சிக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் முதல் நிலை ஒப்பந்ததா ரர்கள் சங்கத்தின் தலைவரான சென் வர்கீஸ் தாக்கல் செய்த மனுவில், சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிக ளில், கடந்த 2019-2020-ஆம் ஆண்டிற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்கான ஒப்பந்தங்கள் இறுதி செய்யப் பட்டன.

அதற்கான பணிகளை மேற்கொள்வதற்கான உத்தரவு கள் கடந்தாண்டு (2020) பிப்ரவரி, மார்ச் மாதங்களில் பிறப் பிக்கப்பட்டன. ஒப்பந்தப் பணிகளை 6 முதல் 12 மாதங்க ளில் முடிக்க வேண்டும் என்ற நிபந்தனைகளும் விதிக்கப்பட் டன.

ஆனால் மார்ச் 3ஆவது வாரத்திலிருந்து கரோனா ஊர டங்கு அமல்படுத்தப்பட்டன. மார்ச் மாதம் முதல் செப்டம் பர் வரை முழு ஊரடங்கு அமலில் இருந்ததால், ஒப்பந்தப் பணிகளில் ஈடுபட்டிருந்த பலர் தங்கள் சொந்த ஊர்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

பின்னர் இந்தாண்டு பிப்ரவரி முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்ததால் பொருட்கள், பணம் கொண்டு செல்வதில் சிரமம் இருந்தது. முழு ஊரடங்கு, சட்டப்பேரவைத் தேர்தல், பணியாளர்கள் இல்லாமை போன்ற காரணங்களால் குறிப்பிட்ட காலத்திற்குள் ஒப்பந் தப் பணிகளை முடிக்க முடியவில்லை.

எனவே, இப்பணிகளை முடிப்பதற்கு 50 சதவீத கால கூடு தல் அவகாசம் வழங்க வேண்டுமென சென்னை மாநகராட் சியிடம் கடந்த அக்டோபரில் கோரிக்கை மனு அளிக்கப்பட் டது. இந்த மனு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை என குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனு நீதிபதி ஆர்.சுரேஷ்குமார் முன்பு விசார ணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் சங்கம் தரப்பில் ஆஜ ரான வழக்குரைஞர்கள் எஸ்.துரைசாமி, வை.இளங்கோ வன், கோரிக்கை மனு மீது மாநகராட்சி தரப்பில் எவ்வித நிவாரணமும் வழங்கப்படாததால் வழக்கு தொடரப்பட் டது. அதைத்தொடர்ந்து சாலைப் பணித் துறை சார்ந்த ஒப் பந்ததாரர்களுக்கு மட்டும் காலநீட்டிப்பு வழங்கப்பட்டுள் ளது. ஆனால் மழை நீர் வடிகால் துறை சார்பான ஒப்பந்ததா ரர்களுக்கு நீட்டிப்பு வழங்கப்படவில்லை. ஆனால் பணியை குறிப்பிட்ட காலத்தில் முடிக்காதது தொடர்பாக அபராதம் வசூலிப்பதிலிருந்து மட்டும் தங்களுக்கு விலக்களிக்கப்பட்டு உள்ளது என்றனர்.

இதையடுத்து மழை நீர் வடிகால் அமைக்கும் பணி களை முடிப்பதற்கான பணிக் காலத்தை நீட்டிக்கக் கோரிய மனுவை நான்கு வாரங்களில் சட்டத்திற்குட்பட்டு பரிசீ லித்து முடிவெடுக்குமாறு மாநகராட்சிக்கு உத்தரவிட்டு வழக்கை நீதிபதி முடித்து வைத்து உத்தரவிட்டார்.

பொதுமக்களுக்கான இலவச சுகாதார வழிகாட்டி இணையதளம் தொடக்கம்

சென்னை, டிச. 16: தொற்றுநோய் காலத்தில் மருத்துவமனைக்குச் செல்வதில் ஏற்படும் கால தாமதத்தைத் தவிர்ப்பதற்காக, பொதுமக்களுக் கான இலவச சுகாதார வழிகாட்டி இணையத ளம் தொடங்கப்பட்டுள்ளது.

இது குறித்து மெடிந்தியா மருத்துவமனை யின் தலைவரும், தலைமை இரைப்பைக் குட லியல் நிபுணருமான டி.எஸ்.சந்திரசேகர் சென் னையில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது: கரோனா பரவல், ஒமைக்ரான் வைரஸ் குறித்த அச்சம் மக்கள் மனதில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தொற்று நோய்க் குப் பிந்தைய காலத்தில் மக்கள் மருத்துவம னைக்குச் செல்லத் தயங்கி, நோய் முற்றியவுடன் மருத்துவமனைக்கு வருகின்றனர் அல்லது ஏதே னும் சிறிய சாதாரண அறிகுறிகளுக்கு அச்சம் காரணமாக தேவையின்றி மருத்துவமனைக் குச் செல்கின்றனர். இத்தகைய சூழலில் பொது மக்களுக்கு உதவ மதிப்பெண் ('ஸ்கோரிங் சிஸ் டம்') ரீதியாக இணைக்கப்பட்ட நோய்களின் அடிப்படையிலான சுகாதார வழிகாட்டி அவ சியமாகிறது. இதை கருத்தில் கொண்டு www.consultdocnow.com என்ற இணையதளத்தைத் தொடங்கியுள்ளோம்.

மதிப்பெண் அடிப்படையில்...: இந்த இணையதளம் சாதாரண மக்களுக்கு அவர் கள் பாதிக்கப்படும் நோய் அறிகுறிகளின் தீவி ரத்தை அவர்களே மதிப்பிடுவதற்கு வழிகாட்டி யாக செயல்படும். இந்த தளத்தில் குறிப்பிடப் பட்டுள்ள நோய் அறிகுறிகளின் தீவிரத்தன்மை அடிப்படையில், மருத்துவரை ஆலோசிக்க பொதுமக்களுக்கு சரியான முறையில் வழிகாட் டுதல்கள் வழங்கப்படும். இதில் சுமார் 700-க்கும் மேற்பட்ட அறிகுறிகள் கொடுக்கப்பட்டுள் ளன. பொது மருத்துவம், இரைப்பை-குடல், இதயம், சுவாசம் மற்றும் நரம்பியல் கோளா றுகளின் அறிகுறிகளின் தீவிரத்தின்படி இந்த இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

மதிப்பெண் 1 முதல் 5 வரை இடையேயான நோயின் தீவிரத்தன்மை இருந்தால், தொடர்ந்து அறிகுறிகள் தென்படும் நிலையில் மருத்துவரை அணுகி ஆலோசனை பெற வேண்டும். 6 முதல் 9 மதிப்பெண் வரை இடையேயான நோயின் தீவிரத்தன்மை இருந்தால் ஒரு தேர்ந்தெடுக் கப்பட்ட மருத்துவ ஆலோசனைக்குத் திட்ட மிட வேண்டும். நோயின் தீவிரத் தன்மை மதிப் பெண் 10 ஆக இருந்தால் தாமதமின்றி உட ன டியாக ஒரு மருத்துவரை அணுகி ஆலோசனை பெற வேண்டும். இந்த இணையதளம் மூலம் இறுதி நோயறிதல் அல்லது சிகிச்சை அட்ட வணையை வழங்க முயற்சிக்கவில்லை. இது குறித்து கூடுதலாக விளக்கம் பெற பொதுமக் கள் 044-28312345 அல்லது கட்டணமில்லா 12789 (பிஎஸ்என்எல் சந்தாதாரர்களுக்கு) என்ற எண்களில் அழைக்கலாம் என அவர் தெரிவித் தார்.

வேலைவாய்ப்புப் பதிவை புதுப்பிக்க தவறியவர்களுக்கு மறுவாய்ப்பு

சென்னை, டிச.16: வேலைவாய்ப்புப் பதிவை புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு மறு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக சென்னை மாவட்ட ஆட்சியர் ஜெ.வி ஜயா ராணி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிவிப்பு:

சென்னை சாந்தோம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மைய அலுவலகத் தில் பதிவு செய்து 2014 முதல் 2019-ஆம் ஆண்டுகளில் (01.01.2014 முதல் 31.12.2019 வரை) பதிவை புதுப்பிக் கத் தவறியவர்களுக்கு வேலைவாய்ப்பு அடையாள அட்டையை புதுப்பித்துக் கொள்ள தமிழக அரசு ஆணை வழங்கி யுள்ளது.

எனவே, இந்த அரசாணை வெளி யீட்டு நாளான டிச.2 முதல் மூன்று மாதங்களுக்குள், அதாவது மார்ச் 1-ஆம் தேதிக்குள் வேலைவாய்ப்பு மற் றும் பயிற்சித் துறையின் http://tnvelaiv aaippu.gov.in/ என்ற இணையதள முக வரியைப் பயன்படுத்தி, பதிவுதாரர்கள் பதிவைப் புதுப்பித்துக் கொள்ளலாம். இணையதளம் வாயிலாக பதிவை புதுப் பிக்க இயலாத பதிவுதாரர்கள், குறிப்பி டப்பட்ட தேதிக்குள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்துக்கு பதிவஞ்சல் மூலம் விண்ணப்பம் அளித்தும் புதுப் பித்துக் கொள்ளலாம் எனத் தெரிவித் துள்ளார் ஆட்சியர்.

equitas Small Finance Bank

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம்: எண்.769, காமராஜர் சாலை, 4வது தளம், பிளாக் 1, அண்ணாநகர், சென்னை, தமிழ்நாடு - 600002

சுவாதீன அறிவிப்பு அசையா சொத்துக்களது விதி 8 (1)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கின்றபடியால் 2002ம் (54/2002) ஆண்டு கடனீட்புச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் பிரிவு 13(12)ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்புச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்காணும் கடன்தாரர்களுக்கு / ஜாமீன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்புகளை அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் அந்தந்த கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிகளைச் செலுத்தமாறு கோரப்பட்டது. ஆனால், கடன்தாரர்கள் கீழ்குறிப்பிட்டுள்ள பாக்கி தொகையை முழுவதும் செலுத்த தவறிவிட்டதால் கடன்தாரர்களுக்கும் / ஜாமீன்தாரர்களுக்கும் / பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் மேற்படி சட்டம் 13 (4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை அதிகாரப்பூர்வ அலுவலர் தமது சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார். எனவே முக்கியமாக கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ / நடவடிக்கையோ வைத்துக் கொள்ள கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது ESFB கீழே குறிக்கப்பட்டவாறு தொகைகளுடன் நாளது தேதி வரையிலான வட்டியையும் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும். சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

கடன்தாரர் இணை கடன்தாரர் பெயர்	கடனீட்டுச் சொத்துக்களின் விவரங்கள் (அசையா சொத்து / கள்)	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை	சுவாதீன தேதி
கிளை : முகப்பேர் கடன் எண் : SEPNMLE0124461 கடன்தாரர்கள் : 1. K.ஜெயசீலன் 2. J. தீபா	வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் கொள்ளூர் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுகா, முகப்பேர் கிராமம், வார்டு - ச், பிளாக் எண். 6, கதவு எண். 16, பாடி, சீனிவாசா நகர், காமராஜ் முதல் குறுக்கு தெரு என்ற முகவரியில் சர்வே எண். 123/1, புதிய சர்வே எண். 123/1A1A பகுதி, டவுன் சர்வே எண். 148-ன் படி மனை எண். 16A, 16 B-ல் உள்ள 416 சதுர அடி மற்றும் அதனுடன் 31 சதுர அடி வழி (UDS 124 சதுர அடி) மொத்தப்பரப்பளவு 447 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள் : வடக்கில் : மனை எண். 17, தெற்கில் : நிலத்தின் மீதமுள்ள பகுதி, கிழக்கில் : நிலத்தின் மீதமுள்ள பகுதி, மேற்கில் : 20 அடி சாலை.	19-06-2021 & ரூ. 3,58,004/-	11.12.2021
கிளை : செங்குன்றம் கடன் எண் : VLPHNADM0001740 கடன்தாரர்கள் : 1. திரு.ராமதாஸ் 2.திரு.ஜெயகாந்தன் R. 3. திரு.ஜீவகாசாமி R. 4.திருமதி.தனலஷ்மி	வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை தாலுகா, புழல் கிராமம், சர்வே எண். 306/5-ன் படி 2400 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள் : வடக்கில் : திரு.சண்முக முதலியார், தெற்கில் : திருமதி. குப்பலஷ்மி அவர்களின் நிலம் (மனை எண். 6), கிழக்கில் : பஞ்சாயத்து குவாட்டர்ஸ் நிலம், மேற்கில் : M.பானுமூர்த்தி அவர்களின் நிலம் (மனை எண். 2).	26.03.2018 & ரூ. 16,35,324/-	11.12.2021
கிளை : பொன்னேரி கடன் எண் : SEREDHL0119466 கடன்தாரர்கள் : 1. திருமதி. திலகவதி M 2.திரு.முரளி S	வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகா, சோழவரம் கிராமம், சர்வே எண். 273/3E & 3F-ன் படி 1988 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனுடன் 246 சதுர அடி நடைபாதை மொத்தப்பரப்பளவு 2234 சதுர அடி. மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள் : வடக்கில் : திரு.சிவன் அவர்களுக்கு சொந்தமான நிலம், தெற்கில் : திரு.தயாளன் அவர்களுக்கு சொந்தமான நிலம் மற்றும் சாலை, கிழக்கில் : திருமதி. பூங்காவனம் அவர்களுக்கு சொந்தமான நிலம், மேற்கில் : திரு.தயாளன் அவர்களுக்கு சொந்தமான நிலம் மற்றும் 6 அடி நடைபாதை.	22.06.2021 & ரூ. 11,43,913/-	15.12.2021
கிளை : மீஞ்சூர் கடன் எண் : SEMINJR0171850 கடன்தாரர்கள் : 1. திரு. சரணராஜ் S 2.திருமதி.சத்யா S 3.திருமதி.ஜெயந்தி S	வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் திருவொற்றியூர் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகா, எண். 173, வல்லூர் (B) கிராமம், கிராம நத்தம் சர்வே எண். 523/107-ன் படி 1076 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் . மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள் : வடக்கில் : சாலை, தெற்கில் : திருமதி. இந்திரா அவர்களுக்கு சொந்தமான வீடு, கிழக்கில் : திருமதி. ஜெயந்தி அவர்களுக்கு சொந்தமான வீடு, மேற்கில் : திருமதி.சாந்தி அவர்களுக்கு சொந்தமான வீடு.	13-06-2020 & ரூ. 2,79,363/-	11.12.2021
கிளை : கும்மிடிபூண்டி கடன் எண் : SEGUMDI0215113 கடன்தாரர்கள் : 1. திரு.பார்த்திபன்.K 2. திருமதி.சித்ரா .K 3. திருமதி.மோனிகா ஷாலினி .R	வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் பொன்னேரி துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகா, எண்.135, மீஞ்சூர் -II கிராமம், நத்தம் பழைய சர்வே எண். 333/16-ன் படி மனை எண். 16-ல் உள்ள 1076 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் . மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள் : வடக்கில் : திரு.வெள்ளைமுத்து அவர்களின் சொந்தமான வீடு, தெற்கில் : சாலை, கிழக்கில் : திரு.தேவராஜ் அவர்களுக்கு சொந்தமான வீடு, மேற்கில் : திரு. முனுசாமி அவர்களுக்கு சொந்தமான வீடு.	21.06.2021 & ரூ. 11,56,075/-	15.12.2021
கிளை : கும்மிடிபூண்டி கடன் எண் : SEREDHL0013373 கடன்தாரர்கள் : 1.திரு.G.செல்வராஜ் 2.திருமதி. தேன்மொழி 3.திரு.G.மோகன் 4.திரு.G.துரை 5.திருமதி.S.அஞ்சலி 6. திரு.G.முனுசாமி	கடன் ஒப்பந்தம் மற்றும் அடமானத்தின் கீழ் உள்ள சொத்து. வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் கும்மிடிபூண்டி துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டி தாலுகா, புதுவயல் கிராமம், நத்தம் பழைய சர்வே எண். 335/7 பகுதி, புதிய சர்வே எண். 335/91-ன் படி 1549 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் . மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள் : வடக்கில் : 10 அடி சாலை, தெற்கில் : திரு.செல்வம் அவர்களுக்கு சொந்தமான நிலம், கிழக்கில் : தெரு, மேற்கில் : திருமதி.தேவவியாமாள் அவர்களுக்கு சொந்தமான நிலம்.	18.06.2021 & ரூ. 4,60,210/-	15.12.2021
கிளை : ஸ்ரீபெரும்புதூர் கடன் எண் : SESRIPR0274182 கடன்தாரர்கள் : 1.திரு.திவாகர் 2.திருமதி. லைலா 3.திரு.அர்ஜீனன்	காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் பேரம்பாக்கம் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுகா, கிழச்சேரி கிராமம், சர்வே எண். 6/2-ன் படி மனை எண். 14-ல் உள்ள 1262 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள் : வடக்கில் : மனை எண். 13, தெற்கில் : சர்வே எண். 258, கிழக்கில் : மனை எண்.9, மேற்கில் : சர்வே எண். 12, 13 , தெரு மற்றும் அதனுடன் அங்கு உள்ள அனைத்து கட்டிடங்கள், அங்கு பொருத்தப்பட்டுள்ள கட்டுமானங்கள் அல்லது தற்பொழுது மற்றும் பின் வரும் காலத்தில் பொருத்தப்படவுள்ள அனைத்தும் மற்றும் அதற்குண்டான வழக்கமான உரிமைகள் உட்பட.	16.06.2021 & ரூ. 3,90,111/-	11.12.2021
கிளை : திருவள்ளூர் கடன் எண் : SETVLUR0221432 கடன்தாரர்கள் : 1.திருமதி. சரஸ்வதி 2.திரு.சேகர்	காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் பேரம்பாக்கம் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுகா, செஞ்சி கிராமம், நத்தம் பழைய சர்வே எண். 29, புதிய சர்வே எண். 215/32-ன் படி 640 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள் : வடக்கில் : திரு.சலபதி அவர்களுக்கு சொந்தமான வீடு, தெற்கில் : திருமதி. தில்லை பட்டம்மாள் அவர்களுக்கு சொந்தமான வீடு, கிழக்கில் : தெரு, மேற்கில் : சர்வே எண். 215/322, மற்றும் காலி நிலம். அளவுகள் : கிழக்கு மேற்காக இருபுறத்திலும் : 32 அடி, வடக்கு தெற்காக இருபுறத்திலும் : 30 அடி மொத்தம் 640 சதுர அடி.	21.06.2021 & ரூ. 9,17,859/-	11.12.2021

தேதி : 17-12-2021
இடம் : சென்னை

அதிகாரப்பூர்வ அலுவலர்,
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

ICICI Bank

ஐசிஐசிஐ வங்கி லிமிடெட்

(பதிவு அலுவலகம் : ஐசிஐசிஐ வங்கி டவர், சாக்லி சர்க்கிள் அருகில், பழைய பத்ரா சாலை, வடோதரா - 390 007, குஜராத்)
மண்டல அலுவலகம் : ஐசிஐசிஐ வங்கி டவர், பாந்த்ரா குர்லா வளாகம், பாந்த்ரா, மும்பை - 400051.
மேலும் அதன் கிளை அலுவலகம் : 3வது தளம், எண். 1, செனடாப் சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

பொது அறிவிப்பு - ஈட்டுறுதி சொத்திற்கான டெண்டருடன் கூடிய மின் ஏல விற்பனை

அசையா சொத்துக்களுக்கான மின் ஏலம் மூலம் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

2002-ஆம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 2002 (சட்டம் 54/2002) (SARFAESI) விதி 6, 8 மற்றும் 9 உடன் வாசிக்க வேண்டிய கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 (SARFAESI விதிகள்) -ன் கீழ் ஐசிஐசிஐ வங்கி லிமிடெட் -ல் அடமானம் வைக்கப்பட்டுள்ள ஈட்டுறுதி சொத்து விற்பனை.

ஐசிஐசிஐ வங்கி லிமிடெட் - ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி **M/s. ரீடா எஸ்டேட்ஸ் பிரைவேட் லிமிடெட்,** (இனி **கடன்தாரர்** என அழைக்கப்படும்) ஈட்டுறுதி அளித்த வங்கியான ஐசிஐசிஐ வங்கி லிமிடெட் - க்கு 23.06.2019 அன்று வரை உள்ள செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான **ரூ.46,56,65,825/-** (ரூபாய் நாற்பத்து ஆறு கோடியே ஐம்பத்து ஆறு லட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று இருபத்து ஐந்து மட்டும்) மேலும் வட்டி மற்றும் பொருந்தக்கூடிய இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக SARFAESI சட்டம் மற்றும் SARFAESI விதிகள் பிரிவு 13 (4) பிரிவு 13 (2) சேர்த்து படிக்கவும் -ன் கீழ் அறிவிப்புகள் அனுப்பப்பட்டு அட்டவணையில் கீழே குறிப்பிட்டுள்ள சொத்தான எண்.34, ஏகாட்டூர் கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை என்ற முகவரியில் 82/4A, 82/3B, 77/5C, 77/5D, 77/5E, 77/5F, 77/5I, 77/6, 77/7 ஆகிய சர்வே எண்களில் உள்ள **4.795 ஏக்கர்** (மொத்தமுள்ள 5.89 ஏக்கர் நிலத்தில் திறந்தவெளி ஒதுக்கப்பட்ட பகுதி (OSR)-க்கு தானமாக வழங்கப்பட்டதை கழித்து மற்றும் OSR நிலத்திற்கான பாதைவழி) நிலம் மற்றும் அங்கு கட்டப்பட்டுள்ள ஏதேனும் க